# ரூ.17,453 கோடி மதிப்பீட்டில் 25 கூட்டுக்குடிநீர்த் திட்டப் பணிகள்!

## பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு பதிலுரை.... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

கிழக்கு கடற்கரை சாலையிலுள்ள பேரூரில், 400 MLD கடல்நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகள் ரூ.4,276 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் முடிவுறும் போது சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 23 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

47 கழிவுநீர் திட்டப் பணிகள் ரூ.1,494 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், ரூ.3,393 கோடி மதிப்பீட்டில் 24 கழிவுநீர் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகள் முடிவுறும்போது 34 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

மீஞ்சூரில் 100 MLD, நெம்மேலியில் 110 MLD மற்றும் 150 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் உள்ளன. தற்போது மேலும், நெம்மேலியின் அருகில் பேரூரில் 400 MLD கடல்நீரை குடிநீராக்கும் நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவடையும்போது மொத்தமாக நாளொன்றிற்கு 760 மில்லியன் லிட்டர் குடிநீர் கடல் நீரிலிருந்து உற்பத்தி செய்ய முடியும்.

பருவமழை பொய்க்கும் காலங்களில்கூட சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு குடிநீர் பிரச்சனை ஏதும் ஏற்படாதவாறு சமாளிக்க முடியும். சென்னையின் வட பகுதிகளில் பெருகிவரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தற்போதுள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளின் திறன் போதுமானதாக இல்லாததால், கழிவுநீர் மற்றும் குடிநீர் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், நீர் மாசுபாட்டை குறைக்கவும் ரூ.946 கோடியில் புதிய திட்டம் தொடங்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மேலும், கூவம் ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்க அனைத்து பணிகளும், முயற்சிகளும் விரிவான திட்ட அறிக்கைமூலம் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரிலுள்ள வணிக வளாகங்கள் மற்றும் பன்னடுக்கு குடியிருப்பு கட்டடங்களில் ஒரு இலட்சம் Smart Meter பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அடையாறு மண்டலத்திலுள்ள பள்ளிப்பட்டு மற்றும் திருவான்மியூர் குடிநீர் விநியோக நிலையங்களிலிருந்து குடிநீர் விநியோகிக்கும் பகுதிகளுக்கு 24x7 குடிநீர் வழங்கும் முறையை செயல்படுத்தும்பொருட்டு சுமார் ரூ.690 கோடி மதிப்பீட்டில் விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

சென்னை மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக 100 கி.மீ. நீளத்திற்கு முதன்மைச் சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டம் (Ring Main) ரூ.2,423 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 5 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கடல்நீரை குடிநீராக்கும் 4 நிலையங்கள் என மொத்தம் 9 குடிநீர் வழங்கல் அமைப்புகளும் ஒன்றிணைக்கப்படுவதால் சென்னை மாநகரத்தின் அனைத்து நீர்பகிர்மான நிலையங்களுக்கும் சமச்சீரான குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நாள் ஒன்றுக்கு 530 MLD குடிநீர் விநியோகம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதன் அடிப்படையில், ஏற்கனவே உள்ள 265 MLD பிரதான குழாயுடன் 265 MLD கொள்ளளவு கொண்ட 2வது பிரதான குழாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் முறையாக பணி செய்யாததால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, மறுஒப்பந்தம் கோரப்பட்டு, மீண்டும் பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது, 90 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் இறுதிக்குள் இப்பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இத்திட்டம் நிறைவுறும்போது, தினமும் 530 MLD குடிநீர் வழங்க இயலும். அதாவது, சென்னை மாநகரத்திற்கு தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவில் பாதி அளவிற்கு செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கப்படும். சென்னை குடிநீர் வாரியம், தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றி, அவர்களது குடும்பங்களின் சமூகபொருளாதார மேம்பாடு, கண்ணியமான சுயதொழில் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காக, DICCIன் (Dalit Indian Chamber of Commerce & Industry) மூலம் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி முதற்கட்டமாக 100 ஜெட்டிங் கம் கிராபிங் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 102 வாகனங்கள் வழங்கப்பட உள்ளன.

**அடையாறு ஆறு ரூ.1500 கோடியில் திட்டம்!**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான மேலாண்மையை "டுபிட்கோ" "டுபிசெல்" மற்றும் "டுவிக்" நிறுவனங்களும். திருப்பூர் பகுதிக்கு குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றுதல் சம்மந்தப்பட்ட பணிகளை தனியார் பங்களிப்புடன் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகமும் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு தூய்மையான மற்றும் பசுமையான சுற்றுச்சூழலை உருவாக்கிட வேண்டுமென்று இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. அதன் முதற்கட்டமாக, CRRT மூலம், அடையாறு நதியை மீட்டெடுத்து, நதிக்கரை நெடுக பசுமை பரப்புகளை அதிகரித்து அழகுறச் சீரமைக்கும் திட்டம், பொது மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் சுமார் ரூ.1,500 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3 வருடங்களாக அறிவிக்கிறீர்கள், ரூ.1,500 கோடியை இன்னும் எத்தனை வருடம் அறிவிப்பீர்கள் என்று சொன்னார்கள். ரூ.1,500 கோடி அறிவிப்பது அல்ல. கிட்டத்தட்ட 10,000 வீடுகள் அங்கு இருக்கின்றன. அந்த வீட்டை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பாக 5,000 வீடுகள் அவர்களுக்குத் தந்து, அவர்கள் குடியிருப்பதற்காக ஒப்புக்கொண்டார்கள். மீதமுள்ள 5,000 பேருக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கு சென்று அவர்களுக்கு பாதுகாப்பான இடம்காட்டி, அந்த இடத்தில் வீடுகளைக் கட்டி, அவர்களுக்கு வீடு வழங்குவதற்காக அவரும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார். எனவேதான், காலதாமதம் ஏற்பட்டது. இந்தத் திட்டம் முடிவுறும்போது மிகச் சிறப்பாக திட்டமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே உறுப்பினர், முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி அவர்கள் பேசியதும், வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள் பேசியதும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. அருள் மற்றும் பா.ம.க. உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போதும்கூட நான் அவ்வபோதே பதில் செல்லியிருக்கிறேன்.

முதலில் நமது தலைவர் 2021ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக 4.28 கோடி மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டது. அது 1971 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை. ஆனால், இந்த 4 ஆண்டு காலத்தில் மட்டும் சுமார் 3.5 கோடி மக்களுக்கு குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்ற ப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) வரும் செப்டம்பர் மாதத்தில் 7.5 கோடி மக்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும். மேலும், ஒன்றிய அரசிலிருந்து, ஜல்ஜீவன் திட்டத்தில் நீட்டிப்பு தந்திருக்கிறார்கள். அதில், 10 குடிநீர்த் திட்டங்களை எடுத்திருக்கிறோம். ஏற்கெனவே 3 திட்டங்கள், இந்த ஆண்டு 7 திட்டங்கள். குடிநீர்த் திட்டப் பணிகளை நிதி அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு அனுமதித்திருக்கிறார்கள்.

**தனியார் பங்களிப்புடன் கூட்டுக்குடிநீர்த் திட்டம்!**

மேலும், திருவண்ணாமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் 2 ஆண்டு காலம் அறிவித்துவிட்டு, நிதிநிலையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். திருவண்ணாமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.7,194 கோடி, விழுப்புரம்கள்ளக்குறிச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.3,310 கோடி, திருநெல்வேலிதென்காசி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.896 கோடி, தஞ்சாவூர்திருவாரூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.1,940 கோடி, கரூர்கடலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.500 கோடி, நாமக்கல்மோகனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.590 கோடி, புதுக்கோட்டைவிராலிமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.1,010 கோடிஇத்திட்டத்தை எடுத்துவிட்டோம், முதற்கட்டமாக எடுத்திருக்கிறோம். திண்டுக்கல்குஜிலியம்பாறை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.890 கோடி, சிவகங்கை தேவகோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.920 கோடி, இதற்கான நிதி ஒதுக்கீடாக இது வரை தமிழ்நாட்டில் தனியார் பங்களிப்புடன் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் வந்திருக்கிறது. தனியார் பங்களிப்புடன் கழிவறைகளைச் சுத்தம் செய்யும் பணிகள் வந்திருக்கின்றன. முதன்முதலாக, கூட்டுக் குடிநீர்த் திட்டம் தனியார் பங்களிப்புடன் நிறைவேற்றுவதற்காக, நம்முடைய ஒன்றிய அரசிலிருந்து வரும் நிதியும் கிடைக்கிறது. மாநில அரசின் நிதியும் கொஞ்சமாக அறிவித்து, நிதிநிலைக்கேற்ப இவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சரிடம் கேட்டேன். முதற்கட்டமாக, ரூ.1,510 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் பணிகளை எடுத்துக்கொண்டு, மீதமுள்ளவற்றை படிப்படியாக எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இது நிறைவேறும்பட்சத்தில், தமிநாட்டில் இருக்கிற அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இந்த 5 ஆண்டுகளிலேயே முழுமையாக வழங்கப்பட்டுவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

குறிப்பாக எங்களுடைய துறை அதிகாரிகள், சுமார் 10 நாட்களாக இதே வேலையாக இருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்த அரசு தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், , முதன்மைச் செயலாளர் டி. உதயசந்திரன், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர்

பி. உமாநாத், , எங்களுடைய துறையின் அதிகாரிகள் முனைவர் டி. கார்த்திகேயன், முனைவர் ச. விஜயகுமார், ஹனீஸ் சோப்ரா, ஜெ. குமரகுருபரன், கே. விவேகானந்தன், முனைவர் டி.ஜி. வினய், கிரண் குர்ராலா, எஸ். சிவராசு, மேலும், எங்கள் துறை அதிகாரிகள் அனைவரின் பெயர்களைச் சொன்னால் நீண்டநேரம் ஆகும் என்ற காரணத்தினால், எங்களுடைய துறைச் செயலாளர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே வெட்டுத் தீர்மானங்களாக அ.தி.மு.க. சார்பில் 178 வெட்டுத் தீர்மானங்களும், காங்கிரஸ் சார்பில் 75 வெட்டுத் தீர்மான ங்களும், பா.ம.க. சார்பில் 29 வெட்டுத் தீர்மானங்களும், கம்யூனிஸ்ட் சார்பாக 26 வெட்டுத் தீர்மானங்களும், பா.ஜ.க. சார்பில் 15 வெட்டுத் தீர்மானங்களும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் 7 வெட்டுத் தீர்மானங்களும் தரப்பட்டுள்ளன. ஆக, உறுப்பினர்கள் 330 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். ஒவ்வொன்றையும் பார்த்து, அதற்கெல்லாம் பதில் தயாரித்து, புத்தகமாகத் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, வெட்டுத் தீர்மானங்களை அமைச்சர் பார்க்கவில்லை என்று கருத வேண்டாம். இவை அனைத்தையுமே படித்திருக்கிறோம். எது தேவையோ, அதனை தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து, அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் உறுதியாகச் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நகராட்சி நிர்வாகத் துறை குறித்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலுரையில் குறிப்பிட்டார்.

